Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 06 விலை ரூபா: 3·00

# ஈழநாதம்

THE EELANAATHAM *Peoples Daily* மக்கள் தினசரி

நாதம் 01 பிரமோதூத வூ மீ ஆடி 11 ஆம் உ வெள்ளிக்கிழமை (27 - 07 - 1990) ஹிஜ்ரி 1410 முஹறம் 04 ஓசை 159

## மாத்தறையில் ஜே.வி.பியால் 15 சிங்களவர் கோலை

(மாத்தறை)

தென்னிலங்கையில் மாத்தறை மாவட்டத்தில் 15 சிங்களவர்கள் ஜே. வி. பி. இயக்கத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.ரீ.56 ரகத் துப்பாக்கிகளுடன் காட்டுப்பகுதியில் இருந்து வெளிவந்த 50 ஜே. வி. பி. உறுப்பினர்கள் குடியிருப்புப் பகுதிக்குள் புகுந்து 15 அரச சார்பானவர்களை இழுத்துச்சென்று (6 ஆம் பக்கம் பார்க்க)

### இன்று வருமென எதிர்பார்க்கப்படும்

# கப்பலில் உணவு வந்தாலும் ஒருநாளுக்கும்போதாது!

## யாழ். அரசாங்க அதிபர் கருத்து

(யாழ்ப்பாணம்)

**கப்பலில் இன்று வரும் உணவுப் பொருட்கள் தற்போது யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு ஒருநாளுக்கே போதுமானதாக இல்லையென யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் அன்ரன் அல்பிரட் தெரிவித்துள்ளார்.**

யுத்த சூழ்நிலைகாரணமாக வடக்கு கிழக்கு மாவட்டங்களில் இருந்தும் பெருந்தொகையான மக்கள் யாழ். மாவட்டத்திற்கு வந்துசேர்ந்துள்ளனர். சாதாரணமாக யாழ்.குடாநாட்டிற்கு மாதம்ஒன்றிற்கு ஐயாயிரம் மெற்றிக் தொன் அரிசியும், மூவாயிரம் மெற்றிக் தொன்மாவும்,இரண்டாயிரம் மெற்றிக்தொன் சீனியும் தேவைப்படும். ஆனால் தற்பொழுது வெளி மாவட்டத்து மக்களையும் சேர்க்கும் போது ஒவ்வொன்றிலும் ஆயிரம் மெற்றிக்தொன் அதிகப்படியாகத் தேவைப்படுகிறது.

அனேகமாக இன்று வந்து சேர்ந்துவிடும் என எதிர்பார்க்கப்படும் கப்பலில் 143 மெற்றிக் தொன்அரிசியும் 100மெற்றிக்தொன்மாவும் 80 மெற்றிக் தொன் சீனியுமேவருகின்றன. இந்த தொகையைப்பார்க்கும் போது எமது பிரதேசத்தில் தற்போது வாழும் மக்கள் தொகைக்கு இதுஒருநாளுக்கே போதுமானதாக இருக்கும் என்பதும் ஐயமேஎன அன்ரன் (6 ஆம் பக்கம் பார்க்க)

## உணவுடன் கப்பல் இன்று வருமென எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

இன்று மாலை யாழ். குடாநாட்டுக்கு உணவுப் பொருட்களைத் தாங்கிய வண்ணம் திருக்கோணமலையிலிருந்து கப்பல் ஒன்று முல்லைத்தீவு துறைமுகத்தில் ஒருபகுதி உணவுப்பொருட்களைஇறக்கிவிட்டு பருத்தித்துறை இறங்குதுறையை வந்தடையும் என அரசாங்க அதிபர் உட்பட பலராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

திருக்கோணமலையிலிருந்து கப்பலுடன் இணைக்கப்பட்ட (6 ஆம் பக்கம் பார்க்க)

## பிரேமதாசா - தமிழ்க் குழுக்கள் கொழும்பில் சந்திப்பு

(கொழும்பு)

ஈ. பி. ஆர். எல். எவ், ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஆகிய ஐந்து தமிழ்க் குழுக்கள் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவை நேற்று கொழும்பில் சந்தித்தன.

இச் சந்திப்பின்போது இக்குழுக்கள் தமிழர் பிரதேசத்தில் நிலவும் உயிரிழப்பு,உடைமைகள் சேதம் குறித்து ஜனாதிபதியுடன் உரையாடியதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை ஈ. என். டி. எல். எவ். குழுவினரும் நேற்று (6 ஆம் பக்கம் பார்க்க)

## வாசக அன்பர்களுக்கு வணக்கம்

இன்றைய 'ஈழநாதம்' இதழ் பார்த்து ஆச்சரியமடைந்திருப்பீர்கள். பத்திரிகைத் தாள் தட்டுப்பாடுதான் ''ஈழநாதம்'' உருமாறியுள்ளதற்குக் (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒட்டுமாவடியில் மோதல்

(ஓட்டுமாவடி)

புனானையிலிருந்து ஓட்டுமாவடி நோக்கி சென்றுகொண்டிருந்த சிறிலங்கா அரசபடை (6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்திற்கு உதவியாக முஸ்லிம் ஊர்காவற்படை

(கொழும்பு)

ஸ்ரீலங்கா அரசபடையினருக்கு உதவியாக மேலதிக முஸ்லிம் ஊர்காவற் படையினரை ஏற்பாடு செய்வதாக இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் நேற்று ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிடம் உறுதியளித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனாப் அஷ்ரப் தலைமையிலான தூதுக் கோஷ்டி நேற்றுக்கொழும்பில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா (6 ஆம் பக்கம் பார்க்க )

## மன்னார் தீவு அகதிகளுக்கு; இதனால் தாக்குதல் இல்லை

(கொழும்பு)

-ரஞ்சன்

மன்னார்தீவு அகதிகள் பிரதேசமாக கருதப்படுவதால், அப்பகுதியில் இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை என்று சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜரத்தினா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் வெளிநாட்டுத் (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஒய்வூதியம் வழங்குவதில் காலதாமதம் ஏற்படலாம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்திலுள்ள ஒய்வூதியம்பெறுவோருக்கான ஒய்வூதியப் பணத்தை வழங்குதலில் மேலும் கால தாமதம் ஏற்படும் என யாழ் செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார். இதற்கான பெளச்சர்கள் இன்னும் வந்து சேராமையே இதற்குக்காரணம்எனவும், செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம்இவற்றைப்பெறுவதற்கு துரித நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்த அவர் இந்திய இராணுவத்தின் வருகையால் நான்கு மாதங்கள் ஒய்வூதியம் வழங்கப்படாமல் இருந்ததையும் சுட்டிக் காட்டினார். (மு)

## கிழக்கு மாகாணத்தில் எத்தனை திருமலை நகரம் உள்ளது?

(சென்னை)

திருமலை நகரை சிறிலங்கா இராணுவம் கைப்பற்றி விட்டதாக சிறிலங்கா இராணுவத் தரப்பு தெரிவித்தாக நேற்று வியாழக்கிழமை இந்திய வானொலி அறிவித்தது.

யூன் மாதம் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் மோதல் தொடங்கிய சில நாட்களின் பின் திருமலை நகரைத் தங்கள் இராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து விட்டதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சர் அறி (6 ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர் சம்பளப் பணம் வங்கிக்கு வந்து சேர்ந்தது

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ஆசிரியர்களுக்கான யூன், யூலை மாதச் சம்பளங்களுக்கான பணம் யாழ்ப்பாண இலங்கை வங்கி மேற்தரக் கிளைக்கு, நேற்று இலங்கை வங்கி கோப்பரேற் கிளையினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணக் கல்விப் பணிப்பாளரின் கணக்கில் 6 கோடிரூபா வரவிலிடப்பட்டதாக யாழ்ப்பாண இலங்கை வங்கி பிரதான முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## அகதிகள் நகைஅடைவு வைக்க அவதி

(சென்னை)

தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்துள்ள இலங்கைத் தமிழ்மக்கள் பாதுகாத்துக் கொண்டு வந்த தங்க நகைகளை இடைத் தரகர்கள் அறா (6 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரி பலி 12 இராணுவம் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்றுவிடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் ஏற்பட்ட மோதலில் ஒரு இராணுவ அதிகாரி கொல்லப்பட்டார். பன்னிரெண்டு பேர் காயமடைந்ததாக இலங்கை இராணுவவட்டாரங்களை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி செய்தி வெளியிட்டது.

## குடிநீரில் நஞ்சு கலப்பு

(காரைநகர்)

காரைநகர் ஊரிகிராம மக்கள் பாவனையிலிருந்து வந்த ஒரே ஒரு பொதுக் கிணற்றில் இனந்தெரியாத சிலரால் நஞ்சுத் திரவாகம் ஊற்றப்பட்டுள்ளதால் அப்பகுதி மக்கள் குடிதண்ணீர் பெறுவதில் பெரும் சிரமத்தை (6 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பலில் கடிதங்கள் இல்லை

கொழும்பிலிருந்து ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டுக் கடிதங்களும் பதிவுத் தபால்களும் இன்று மாலை இங்கு வந்து சேரவிருக்கும் கப்பலில் எடுத்துவரப்படவில்லை என்று தெரியவருகிறது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஏறாவூரில் தாக்குதல்

(ஏறாவூர்)

ஏறாவூரிலிருந்து கிரானை நோக்கிச் சென்ற படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதலை மேற்கொண்டனர். நேற்று முன் தினம் இடம்பெற்ற இத்தாக்குதலின் சேதவிபரங்கள் தெரியவில்லை

## வீரவணக்கம்

பலாலி மயிலிட்டிப் பகுதியில் அரச படையினருடன் நேற்றுப் பகல் இடம்பெற்ற மோதலில்கமிட்(சி. இராசலிங்கம், அச்சுவேலி) என்னும் போராளி வீர மரணமடைந்தார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைச்செலுத்தியுள்ளனர்.

## உதவப்போய் உபத்திரவம் தேடினார்

(கைதடி)

சைக்கிளில் வந்து கொண்டிருந்தவர் நடந்துவந்தஒருவரை பாவம் பார்த்து தனது சைக்கிளையே பறி கொடுத்தார்.

நேற்றுமுன்தினமிரவு யாழ்ப்பாணத்திலிருந்து சைக்கிளில் (6 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கோவில்களுக்கு தேவையான பூசைமணி, அசையாமணி, திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, வேல், சூலம் கும்பசெம்பு அடுக்குத்தீபம்,, பஞ்சாலாத்தி, பட்டுக்குடை அனைத்துப் பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஸம்ஸ்;- 297, K.K S. றோட், தற்போது:- 76/2. நாவலர், றோட், சோனக தெரு, யாழ்ப்பாணம். (R–537)

### தண்டனை

(அச்சுவேலி)

அச்சுவேலி வடக்கில் ஒரு இலோ சீனியை 68 ரூபாவிற்கு விற்பனை செய்தவருக்கு சிற்றூரவையினால் ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மேற்படி சிற்றூரவையினர், வர்த்தகர்கள் உணவுப் பொருட்களை நியாயவிலையில் விற்பனை செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(16)

### சில பேக்கரிகள் பணிஸ் தயாரிப்பு

(பண்டத்தரிப்பு)

சில பேக்கரிகள் தமக்கு வழங்கப்படும் மாவில் பணிஸ் வகைகளையும் தயாரித்து லாபம் ஈட்டி வருகின்றனர்.

தற்போதைய நிலையில் மக்களுக்கு பாண் வழங்குமாறு உணவுத் திணைக்களம் இவர்களுக்கு மா விநியோகித்து வருகிறது. அதில் இவர்கள் லாபம் தேடுகின்றனர்.

### அகதிகளுக்கு உணவுப் பார்சல்

(சாவகச்சேரி)

திருக்கோணமலையிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக தென்மராட்சிப் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகளுக்கு சாப்பாட்டுப் பார்சல்களை வழங்குவதற்கான முயற்சியில் தென்மராட்சி இந்து இளைஞர் மன்றங்கள் துரிதமாக ஈடுபட்டுள்ளன.

(35)

# உணவு, நீர் இன்றி பல மைல் காட்டின் ஊடே நடந்த மாணவி

(நமது நிருபர்)

''ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் அட்டூழியம் தாங்க முடியாமல் பலமைல் தூரம் பயங்கரக் காட்டினூடாக நடந்து வந்தோம். 3 நாட்களாக அருந்த நீர் இல்லை, உண்ண உணவேதுமில்லை. சோர்வுற்ற நாங்கள் களைத்து ஓரடி கூட எடுத்து வைக்க முடியாமல் நடுக்காட்டினுள் இருந்து விட்டோம். அவ்வேளை ஆயுத பாணிகளாக அங்கே வந்த இளைஞர்கள் சிலர் எங்களுக்கு குடிக்க நீரும், உண்ண உணவும் தந்து ஆதரவளித்தார்கள். அப்பொழுது கூட எங்கிருந்தோ 'ஷெல்' கள் வந்து விழுந்த வண்ணமிருந்தன. வானுயர்ந்த அக்காட்டுக்கு மேலே இருந்து கூட 'பொம்மர்' கள் குண்டுமாரி பொழிந்தன. எங்களை அந்த இளைஞர்கள் பதுங்கு குழிகளுக்கு அழைத்துச் சென்று பாதுகாப்பும் வழங்கினர்.''

திருமலை, உப்புவெளி ஏகாம்பரம் வீதியைச் சேர்ந்த செல்வி அஞ்சலா சூசைப்பிள்ளை (24 வயது) என்பவர் இப்பரிதாபகரமான சம்பவத்தை தெரிவித்தார். இவர் ஒரு மாணவி. இவருடன் தாயார் சூ. பியட்றிஸ், சகோதரரின் பிள்ளைகளான ஜடா (17வயது), ஜயந்தி (14வயது), பிறைட்டன் (16 வயது) ஆகியோரும் உடனிருந்தனர்.

கடந்த 12 ஆம், 13 ஆம் திகதிகளில் உப்பு வெளிப் பகுதியைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதி மக்களைக் கொடூரமாகத் தாக்கத் தொடங்கியதைத் தொடர்ந்து ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 12பேர் பாதுகாப்புக் கருதி உடுத்த உடையுடன் காட்டுப் பகுதிக்குள் ஒடிப்பதுங்கிக் கொண்டனராம். இவர்களுள் மேற்குறிப்பிட்ட நான்கு பேரும் மற்றையவர்களை விட்டுப் பிரிந்து யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர்.

வி. ஆனந்தன் (40 வயது) இவரின் மனைவி சரோஜினி ஆனந்தன் (36 வயது), பிள்ளைகள் ஜெயப்பிரியா (11வயது) (இவர் செவிப்புலனற்றவர்), ஜெயக்குமார் (9 வயது) ஜெரூட் (7 வயது) இவர்களின் நிலைமை இதுவரை தெரியவில்லையாம்.

**25 இளைஞர்கள் கொல்லப்பட்டனராம்!**

மேலும் அவர் தெரிவிக்கையில், சம்பவதினம் உப்புவெளி சூசையப்பர் கோவிலுக்கு உப்பு வெளியிலுள்ளவர்களை அடையாள அணிவகுப்புக்காக இராணுவத்தினர் கொண்டு சென்றனர். பொதுமக்களைக் கொண்டு செல்லும் பொழுது கண்டபடி தாக்கினார்கள். இளம் பெண்களையும், வயோதிபர்களையும் கூடவிட்டு வைக்கவில்லை. கொளுத்தும் வெயிலில் நீண்டநேரம் நிறுத்திவைத்து விசாரித்தார்கள். அச்சமயம் 25 இளைஞர்களை முகாமுக்குக் கொண்டு சென்றார்கள். அவர்களின், நிலை என்ன என்று தெரியவில்லை. அவ்விளைஞர்கள் கொலை செய்யப்பட்டுவிட்டதாக அறிந்தோம்.

**கி. சே. அலுவலரும் தாக்கப்பட்டார்**

நிலாவெளி கிராம சேவை அலுவலரும் இராணுவத்தினரால் கடுமையாகத் தாக்கப்பட்டார்.

நாங்கள் 60 மைல் தூரம் நடைப்பிணமாக அலைந்து முடிவில் விடுதலைப் புலிகள் போராளிகளின் உதவியுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தோம் என்று சொன்னார்.

### வழிபாடு

(கொழும்புத்துறை)

இன்று வடக்குக் கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தை முன்னிட்டுத் தமிழர் அழிவு என்ற அநீதியை ஒழிக்க 17ஆந் திகதி செவ்வாய்க் கிழமை பத்தைமேனி விநாயகர் தேவஸ்தானத்தில் அஸ்டோத்தர சதசங்காபிஷேகமும் (108) விஷேட கூட்டுவழிபாடும் சிறப்பாக நடைபெற்றது. (24)

### வெற்றி வேண்டி விசேட பூசை

(முள்ளியவளை)

தமிழீழ விடுதலைப் போர் வெற்றி பெறவும் இறுதிப் போர் புரியும் விடுதலைப் புலிகள் இழப்புக்கள் இன்றி நலம் பெறவும் காயம் உற்றோர் சுகம் பெறவும் வேண்டி முள்ளியவளைக் காட்டுவிநாயகர் ஆலயத்தில் மக்களால் கூட்டுப் பிரார்த்தனையும் விசேட பூசையும் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. (58)

### மீண்டும் இயங்குகிறது

(வவுனியா)

ஓமந்தை வைத்தியசாலை மீண்டும் செயற்படுகிறது.

அண்மையில் ஓமந்தையில் இடம்பெற்ற ஹெலி தாக்குதல்களினால், வைத்தியசாலை கட்டடம் சேதமடைந்ததும், அங்கிருந்த நோயாளர்கள் சிலர் காயமடைந்ததும் தெரிந்ததே.

அண்மையில் செஞ்சிலுவைச் சங்கத்தினரால் இந்த வைத்திய சாலைக்கு மருந்துப் பொருட்கள் வழங்கப் பட்டதை அடுத்து செயல்படத் தொடங்கியுள்ளது.

இவ் வைத்தியசாலையில் ஒரேயொரு வைத்தியர் மட்டும் பணிபுரிவதும், நோயாளர் படுக்கைகள் இல்லாதிருப்பதும் குறிப்பிடத்தக்க குறைபாடுகளாகும். (தி)

### பொதுக்கூட்டம்

(வேலணை)

தீவுப்பகுதி பயிலுநர் ஆசிரியர்களுக்கான பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற உள்ளது.

அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்கும்படி மேற்படி சங்கம் கேட்டுள்ளது.

### ஊழியர்கள் இடம் மாற்றம்

(ஈச்சமோட்டை)

கேரதீவு - சங்குப்பிட்டி இறங்குதுறையில் பணிபுரிந்த ஊழியர்கள் அனைவரும் பூநகரி பலநோ. கூ. சங்கத்துக்கு இடம் மாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த பத்தொன்பதாம் திகதி இந்தத் துறைமுகத்தை ஸ்ரீலங்கா விமானப்படையினர் குண்டுபோட்டுத் தகர்த்தனர் என்பது தெரிந்ததே.

(43)

### ஒன்றிணைந்து செயற்படவும்

(கொழும்புத்துறை)

கிராமம் தோறும் இந்து சமய ஆலயங்கள் ரீதியாக இந்து மன்றங்களை அமைத்து உலக இந்து இளைஞர் மன்றத்துடன் ஒன்றிணைத்துச் செயற்படவேண்டும் என்று உலக இந்து இளைஞர் மன்றப் பிரதிநிதி திரு. நா. குமரகுருபரன் விடுத்த கோரிக்கையை யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை ஆட்சிக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. (24)

### விநியோகத்தில் முன்மாதிரி

(வடமராட்சி)

அரிசி உற்பத்தியில் உடுப்பிட்டி பல-நோக்குக் கூட்டுறவுச் சங்கம் முன்மாதிரியாகச் செயற்பட்டு வருகின்றது.

மேற்படி பல-நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமான 'மில்' மூலம் உற்பத்தி செய்யப்படும் இவ் வரிசியினை புலோலி, நீர்வேலி, சுன்னாகம், பருத்தித்துறை ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து தமது பிரதேச மக்களுக்கு விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கது. (18)

## குடாநாட்டிற்கு கிளிநொச்சியில் இருந்து அகதிகள்வருகை

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரச படைகளின் தாக்குதல்களினால் கிளிநொச்சி, முரசுமோட்டை, பரந்தன் கண்டாவளை ஆகிய இடங்களில் இருந்து பெருமளவு மக்கள் அகதிகளாக யாழ் மாவட்டம் நோக்கி வந்து கொண்டிருக்கின்றனர்.

இவர்கள் பெரும்பாலும் சாவகச்சேரி, கொடிகாமம், மட்டுவில், வரணி ஆகிய பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களிலேயே தஞ்சமடைகின்றனர். இதனால் தென்மராட்சிப்பகுதியில் அகதிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக்காணக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு வந்து கொண்டிருக்கும் அகதிகளுக்கு யாழ். அரசாங்க அதிபரினால் முதல் கட்ட உலர் உணவுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ம)

### மோட்டார் சைக்கிள் இறக்குமதி மட்டுப்படுத்தல்

(கொழும்பு)

பாவிக்கப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் இறக்குமதி செய்வதைமட்டுப்படுத்துவதற்கு நிதியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

## 42 ஆம் நாள் நினைவஞ்சலியும் கவலை தெரிவித்தலும்



வீர வேங்கை

**(ஸ்ராலிங்)**

தமிழீழத்தில் தோற்றம்: 14 . 11 . 1969

தமிழீழத்தில் மறைவு: 16 . 6 . 1990

பூநகரி - சாமிப்புலம்

**சதாசிவம் தயபாலசிங்கம் (தயா)**

காங்கேசன்துறையில் சிங்கள இராணுவத்தினரோடு நடந்த மோதலில் வீரமரணமடைந்ததற்காக அன்னாரின் குடும்பத்தாருக்கு எங்கள் ஆழ்ந்த கவலையைத் தெரிவிக்கின்றோம்.

தம்பிராய்

(கி. சே. பிரிவு)

சிற்றூரவையினர் (B 1291)

## 10 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 27-01-1926



மறைவு 18-07-1980

கொட்டடி

**நெ. சீனிவாசகம் நடராஜா**

(யாழ். மாநகரசபை ஊழியர்)

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி: மகேஸ்வரி

பிள்ளைகள்: லலிதா, கணேசராஜா (ஜேர்மனி) அனுசுயா

மருமகன்: ஆனந்தராஜா (கனடா)

பேர்த்தி: தர்ஷித்தா

வடலியடைப்பு. (B1292)

புதிய உத்திகளைக் கையாண்டு

# மரபுவழி உற்பத்திகளை நவீனமாக்கி எமக்கெதிரான தடையை நீக்குவோம்!

ஈழத்திலிருந்து சோழநாட்டிற்கு உணவுப் பொருட்கள் சென்றடைந்ததாக சங்க காலத்து வரலாற்று சான்றுகள் எமக்கு கூறுகின்றன. இந்த வரலாற்று சான்று 'ஈழம்' என்றுகூறப்படும் தமிழீழத்தையே குறிப்பதாகும். மன்னாரில் அமைந்துள்ள மாதோட்டம் என்ற துறை முகத்தினூடாகவே இந்த ஏற்றுமதிகள் யாவும் இடம் பெற்றுள்ளன.

### புராதனக் குளங்கள்

இந்த ஏற்றுமதியினை உறுதிப்படுத்துவனவாக அமைந்துள்ளவை தமிழீழப் பிரதேசத்தில் காணப்படும் குளங்களாகும். இந்தக் குளங்கள் யாவும் புராதனக் காலத்தில் அமைக்கப்பட்டவைகளாகும். இந்தக் குள்ங்களை அண்டி குடியேற்றங்கள் அமைந்திருந்ததுடன் பாரிய அளவிலான பயிர்ச்செய்கையும்மேற்கொள்ளப்படலாயிற்று.

இருந்தும் இயற்கையின் தாக்கததால் உண்டான அழிவுகளின் நிமித்தம் குளங்களை அண்டிய குடியேற்றங்கள் இடம் பெயரப்பட்டதுடன்; பயிர்ச்செய்கையும் தடைப்படலாயிற்று. இதனால் புராதன காலத்து இந்தக் குளங்கள் யாவும் கைவிடப்பட்டுச்கவனிப்பாரற்ற நிலையில் பழுதடைந்து போய்க் கிடப்பதை இன்றும் நாம் காணக் கூடியதாக இருக்கிறது,

### தூர்ந்துபோனகுளங்களை ஆழப்படுத்தல் வேண்டும்

இன்றைய காலகட்டத்தில் தூர்ந்து போன நிலையில் காணப்படும் இந்தக் குளங்களின் பக்கம் எமது கவனத்தை செலுத்துவதுடன் அவைபுனர்நிர்மாணம் செய்யப்படல் வேண்டியதும் அவசியமாகும்.

தூர்ந்து போன இந்தக் குளங்களை புனர்நிர்மாணம் செய்வது இயலாத காரியம் என்று பெருமூச்சு விடுவோமாகில்; இன்றைய அரசியல், பொருளாதார போராட்டத்தை சரியான முறையில் உணர பக்குவப்படாதவர்களாகவே ஆவோம் என்பதுடன்; இப்போராட்டத்திலிருந்து ஒதுங்கி நிற்பவர்களும் ஆவோம். இதற்கு சீனப் போராட்டத்தின் போது அந்நாட்டில் கூறப்பட்ட 'மலைகளை அகற்றிய மூடக் கிழவன்' என்னும் கதை நல்ல எடுத்துக்காட்டாகும்.

இன்றைய எமது யுத்தம் ஒரு நீண்டகால யுத்தமாக மாறினும்கூட அதற்கு முகம் கொடுத்து செயல்படக் கூடிய நிலையில் எமது உணவுத் தேவையை வளம்படுத்தல் அவசியமாகும். அது மட்டுமன்றி நாளை மலரவுள்ள 'தமிழீழம்' என்ற அந்த உன்னத ஆட்சி பாலைவனத்தில் அல்லாது பசுமையான தளத்தில் அமைய வேண்டும்என்று நாம் எண்ணிப் பார்க்கக் கூடாதா?

எனவே இந்தக் குளங்களை கூட்டு முயற்சிகளை மேற்கொண்டு புனர்நிர்மாணம் செய்தல் மிக மிக முக்கியம் இதனால் ஆண்டுதோறும் விரயமாக்கப்படும் எமது மண்ணின் நீர்வளத்தை சேமிப்பதுடன், உணவுக்காக அந்நியனை தெண்டனிடும் நிலைமை மாற்றமடைந்து எமது உணவுத் தேவையை நாமே பூர்த்தியடையச் செய்யும் நிலைமையை உருவாக்கிக் கொளளலாம் என்பது திண்ணம்.

### தரிசு நிலங்கள்

வன்னிப்பிரதேசத்தில் மட்டுமன்றி யாழ். குடாநாட்டிலும் கூட பல ஆயிரக் கணக்கான பரப்புக் காணிகள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாத நிலையில் தரிசு நிலங்களாகக் கிடப்பதைக் காணமுடிகின்றது. இந்த நிலங்களில் பணத்தை மாத்திரம் மையமாகக்கொண்ட குறிப்பிடப்பட்ட சில பயிர்கள் மாத்திரம் நடப்படுவதுண்டு.

> **உணவுத் துறையில் மட்டுமன்றி எம்மண்ணில் காணப்படும் சகலவிதமான மூலப் பொருட்களையும் பயன்படுத்துவதுடன்;மரபுவழி உற்பத்திகளையும் நவீனபடுத்திப் பலவாறான எமது குறைந்த பட்ச தேவைகளையாவது நாம் நிவர்த்தி செய்துகொள்வோம்.**

இந்த வெற்றுக் காணிகள் காணிச் சொந்தக்காரர்களால் உணவுப் பயிருக்காகப் பயன் பயன்படுத்தப்பட வேண்டும், காணிச் சொந்தக்காரர்கள் இதுவிடயத்தில் அக்கறை கொள்ளவில்லையெனின் ஆர்வமிருந்தும் காணிகள் இல்லாது கஷ்டப்படுவோருக்கு இந்த நிலங்கள் விட்டுக்கொடுக்கப்பட வேண்டும். இது விடயத்தில் தற்பொழுது இயங்கிவரும் சிற்றூர் அவைகள் கவனம் செலுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமானால் அது வரவேற்கப்படவேண்டிய ஒரு நல்ல விடயமாக அமையும்.

### பணப்பயிர்கள்

குடாநாட்டைப் பொறுத்த வரையில் புகையிலை, வெங்காயம், உருளைக்கிழங்கு,முந்திரிகை ஆகியவைகளே பாரிய அளவில் பயிரிடப்படுவதுண்டு. இவை யாவும் நேரடியான பணத்தின் எதிர்பார்ப்புடன் கொழும்புச் சந்தையை மையமாகக்கொண்டுமேற்கொள்ளப்படும் உற்பத்திகளாகும்.

இன்றைய காலத்தில் மட்டுமல்ல இனிவரும் காலத்தில் கூட எமது உற்பத்திகளுக்கு கொழும்பு சந்தையாக இருப்பது நடைமுறை சாத்தியப்படாத ஒன்றாகவே அமையும் என்பதை எம்மவர்கள் உறுதியாக உணரவேண்டும், இந்நிலையில் மேற்கொள்ளப்படும் இந்தப் பயிர்களை எம் மண்ணின் தேவைக்கொப்ப பயிரிடுவதுடன்; முன்னைய கட்டுரையில் குறிப்பிட்டதுபோன்று கிழங்கு உட்பட குறுகியகால தானிய வகைகளை பாரிய அளவில் உற்பத்தி செய்தலே மிகவும்பொருத்தமானதாகும் இதன் மூலமே நாம் எதிர் நோக்கும் பட்டினியிலிருந்து ஓரளவாவது எம்மைக் காப்பாற்றிக்கொள்ள முடியும்.

### வைத்தியத் துறை

இன்று வைத்தியத்துறையில் கூட பழைய மரபு வைத்யங்களை மீண்டும் நாம் புனர்நிர்மாணம் செய்தல் முக்கியமானதாகும். சீன நாட்டின் மரபுவழி வைத்தியமாக விளங்கிய ''அக்குபஞ்சர்'' முறை தற்பொழுது புனர்நிர்மாணம்

**மாத்தளையான்**

செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

எமது மண்ணிலும் மரபுவழி வைத்தியங்கள் பல இருந்தன. இருந்தும் அவைகள் எல்லாம் எங்கே சென்றடைந்தன? என்று தேடித்திரியும் நிலையில் இன்று நாம் இருக்கிறோம். குறிப்பாக யாழ். நாட்டில் கஸ்தூரியார் என்னும் வைத்தியம் மிகவும்பிரபல்யம்வாய்ந்தது. அதன் பெயரால் ஒரு பிரதான வீதியே யாழ். நகரில் அமைந்துள்ளதையும் அறிவோம். இருந்தும் அந்த கஸ்தூரியார் வைத்தியம் இன்று நடைமுறையில் இல்லாததுடன்இன்னும்சிலகாலத்தில் முழுமையாகவே அழிந்துவிடும் போக்கு நிலவுகின்றது.

### சகல விதமான உற்பத்திகளும் அவசியமே

இன்றைய நெருக்கடியான காலகட்டத்தில் சிறிலங்காஅரசினால் எமக்கான மருந்துகள் முற்று முழுதாகத்தடை செய்யப்படும் பட்சத்தில் நோயினாலேயே பலர் சாகும் நிலைகூட ஏற்படலாம். இது நாம் எதிர்பார்க்க வேண்டியதே. எனவே இவ்வாறான இந்த மரபுவழி வைத்தியங்களுக்கும் புத்துயிர் அளிக்க வேண்டியது இன்றைய காலகட்டத்தின் தேவையாகும்.

மேலும் இன்றைய நிலையிலும் கூட அந்நிய பொருட்களின் மீதான எமது மக்களின் மோகம் சிறிதளவாவது குறைந்ததாக தெரியவில்லை. உரிமைக்காகப் போராட்டம் நடத்தப்படும் ஒரு காலகட்டத்தில் அந்நாட்டு மக்கள் அந்நிய நாட்டுப் பொருளின் மீது மோகம் கொண்டிருப்பதென்பது வேண்டத்தகாத ஒரு செயலாகும். இதற்கு இந்திய சுதந்திரப் போராட்டம் நல்ல உதாரணமாகும்.

குறிப்பாக சன்லைட் சவர்க்காரத்தை நாம் ஏன் பாவிக்கிறோம்? உடையில் உள்ள அழுக்கை அகற்றுவதற்காகவே ஆகும். உடம்பினதும் உடையினதும் அழுக்கை நமது மண்ணில் நமது மூலப் பொருட்களைக் கொண்டு உருவாக்கப்படும் சவர்க்காரத்தால் அகற்றும் நிலை ஒன்று இருக்கையில் நாம் அந்நிய சவர்க்காரத்தை நாடுவது மடமையே. நமது மண்ணின் உற்பத்தியை பரவலாக நாம் நாடும் பொழுது அந்தப் பொருளின் உற்பத்திப் பெருக்கத்தின் ஊடாக அதன் தரத்தை உயர்த்துவது மட்டுமன்றி விலையைக்கூட குறைக்கும் நிலையை உருவாக்கலாம்.

இதனைப்போன்றே உணவுத் துறையில்மட்டுமன்றிஎம் மண்ணில் காணப்படும் சகல விதமான மூலப்பொருட்களையும் பயன் படுத்துவதுடன், மரபுவழி முறைகளையும் நவீனப் படுத்தி பலவாறான எமது குறைந்தபட்ச தேவைகளையாவது நாம்நிவர்த்தி செய்துகொள்வது அவசியமானதாகும்.

இது விடயத்தில் தமிழீழ ஆய்வு நிறுவனம் மட்டுமன்றி எம் மண்ணில் வாழுகின்ற நிபுணத்துவம் பெற்ற அனைவரது பங்களிப்பும் மிக,மிக முக்கியமானதாகும். உற்பத்தித் துறையில் தீர்க்க தரிசனத்துடன் செயல்பட நாம் தவறுவோமானால் எதிர்வரும் நாட்களில் பட்டினிச்சாவை எதிர்நோக்குவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்பதை நாம் உணர வேண்டும்.

(முற்றும்)

---

## கண்டனத் தீர்மானம்

(கொழும்புத்துறை)

அப்பாவித் தமிழ் மக்கள் மீதும்,சமய வழிபாட்டுத்தலங்கள்மீதும்,வைத்தியசாலைகள் பொது ஸ்தாபனக் கட்டிடங்கள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வரும் விமானக் குண்டு வீச்சு, ஷெல்தாக்குதல்களுக்கு யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது.

தமிழ் மக்கள் மீதான அரச படைத் தாக்குதலை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதியைக் கோரும் கடிதம்ஒன்றை அனுப்பிவைப்பது என்று பேரவையின் ஆட்சிக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (24)

## கருப்பணி தயாரிப்பு

(தீவுப்பகுதி)

தீவுப்பகுதியிலும் கருப்பணி உற்பத்தியை மேற் கொண்டு தீவுப்பகுதி மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் பொருட்டு பனை வெல்லம் தயாரிப்பதற்கும் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (15)

## மதயானை சுடப்பட்டது

ஓமந்தை கொந்தக்காரன் குளம் பகுதியில் மதம்பிடித்து கிராமத்திற்குள் புக முனைந்த யானை ஒன்றை கிராமவாசிகள் சுட்டு வீழ்த்தினர்.

இச்சம்பவம் கடந்த 15 ஆம் திகதி இடம்பெற்றது. (தி)

## பூநகரிக்கு அகதிகள் வருகை

(பூநகரி)

தி.ருக்கோணமலை, அம்பாறை பகுதியில் இருந்து சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட அகதிகள் இங்கு வந்துள்ளனர்.

இவர்களுக்கு பூநகரி உதவி அரசாங்க அதிபர் நிவாரண உலர் உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கிளிநொச்சி, பரந்தன் பகுதியில் ஏற்பட்ட அசம்பாவிதங்களினால் அப்பகுதி மக்களும் இங்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

## மீட்புநிதிக்கு மட்டுவில் முன்மாதிரி

(சாவகச்சேரி)

மட்டுவில் பகுதியில் இளந்தாய்மார் தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிதிக்காக தமது தங்க நகைகளைப் புலிகளிடம் கொடுப்பதற்கு முண்டியடித்துக் கொண்டு முன் வந்துள்ளார்.

அண்மையில் சிற்றூரவைக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு தாய் உடனே தனது கழுத்திலிருந்த தங்கச் சங்கிலியைக் கழற்றி விடுதலைப் புலிகளிடம் கொடுத்தார். ஆனால் அவர்கள் அதை உடன் வாங்க மறுத்து விட்டனர். தாம் தங்கம் போன்ற பொருட்களைச் சேகரிக்கத் தொடங்கும் போது முதலில் அந்தத்தாய் கொடுக்கும் தங்க நகையைப் பெற்றுக்கொள்வதாக அவருக்கு ஆறுதல் கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (35)

## தொண்டர் சேவை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் நல்லூர் முருகன் ஆலய வருடாந்த உற்சவ காலத்தொண்டர் சேவை வழமைபோல் இவ் வருடமும் நடத்துவதெனப் பேரவையினரால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (24)

## தெருக்கூத்து

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பகுதியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மாணவர் இயக்கத்தினரால் ''தெருக்கூத்து'' தினமும் ஆங்காங்கே நடத்திவரப்படுகிறது. (35)

## மீண்டும் பங்கீட்டு அட்டை

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் உணவு வினியோகத்திற்கு மீண்டும் பங்கீட்டு அட்டை முறையை அறிமுகம் செய்துள்ளனர். (24)

## துணைப்படை பயிற்சி

(சாவகச்சேரி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் துணைப்படைப் பயிற்சி பெறுவதற்கான திட்டத்திற்கு, தென்மராட்சி பகுதிப் பாடசாலைகளிலுள்ள மாணவர்கள் பூரண ஆதரவு காட்டியுள்ளதுடன்; நூற்றுக் கணக்கில் திரண்டு பயிற்சிக் களம் தேடி வருவதையும் காணக்கூடியதாக உள்ளது. (35)

## உதவி வழங்க துரிதநடவடிக்கை

(பருத்தித்துறை)

வடமராட்சி கோட்டக் கல்வி அலுவலகப் பகுதியில் உள்ள பயிலுநர் ஆசிரியர்கள், வன்செயல்களினால் பாதிப்படைந்து இடம் பெயர்ந்து வந்து தஞ்சமடைந்துள்ள அகதிகளுக்கு உதவிகளை வழங்குவதற்கான துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (25)

## முத்தையா பேக்கரியில் தினமும் பாண்

(ஈச்சமோட்டை)

கொழும்புத்துறை முத்தையா பேக்கரியில் நாளாந்தம் அதிகாலை 3 மணியில் இருந்து ஒருவருக்கு 2றாத்தல் பாண் கொடுக்கப்பட்டு வருகிறது.

500க்கும் மேற்பட்ட மக்கள் கியூவில் நின்று வாங்குவதையும் 1 றாத்தல் பாண் ரூ. 5.50 சதமாக விற்கப்படுவதையும் காணமுடிகிறது. (43)

## ஷெல் எடுக்கப்பட்டது

(சாவகச்சேரி)

கல்வயலில் கிணறு ஒன்றை இறைத்து துப்பரவு செய்து கொண்டிருந்தவர்கள் புதைந்து கிடந்த பதினைந்து அங்குல நீளமுள்ள ஷெல் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளனர்.

இது அப்பகுதி தமிழீழ விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. (35)

# புலிகளையும் மக்களையும் அந்நியப்படுத்த முடியாது

(தீவுப்பகுதி)

''புலிகளையும், மக்களையும் அந்நியப்படுத்த எண்ணும் நினைவு மாற்றப்பட வேண்டும். இந்நாட்டிலுள்ள ஒவ்வொரு இளைஞனும் புலிகளுடன் இணைந்து போராட முன்வர வேண்டும். சுதந்திரம் மற்றவர் பெற்றுத்தர வாங்கும் சுக்கோ மிளகோ அல்ல. தான்தானே போராடிப்பெற வேண்டும்''

மேற்கண்டவாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் தீவக அரசியற் பொறுப்பாளர் திரு நரேஸ் வேலணை ஆத்திசூடி முன்றலில் நடைபெற்ற கடற் கரும்புலிகளின் வீர அஞ்சலிக் கூட்டத்தில் பேசும் போது குறிப்பிட்டார்.

விடுதலைப்புலிகளின் தீவக மகளிர் அணிப் பொறுப்பாளர் செல்வி சோபிகா பேசுகையில், பெண்களின் பங்களிப்பே போராட்டத்தின் உச்சநிலை. இந்நிலை எய்தியபின் வீழ்வோம் என்பது இனி இல்லை என்றார்.

## மக்கள் பார்வைக்கு முகாம் நிலைமை

(முல்லைத்தீவு

அகதிமுகாம்களில் அங்குள்ள குடும்ப எண்ணிக்கை, அங்கத்தவர் தொகை, உணவுப் பொருள் கையிருப்பு, இடவசதி என்பன பார்வையாளர்களின் கவனத்திற்கு கரும்பலகையில் விபரமாக எழுதியுள்ளார்கள். (58)

## பயிர்கள் நாசம்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் மண்ணெண்ணைக்கு ஏற்பட்டிருக்கும் பலத்த தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் தாங்ள் கஷ்டப்பட்டு செய்கைபண்ணிய பயிர்வகைகளுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

பெரும்பாலான இடங்களில் மேற்கொள்ளப்பட்ட பெருந்தொகையான வெங்காயம் உட்பட அனைத்துப் பயிர்களும் அழிந்துபோகும் கருகிய நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (24)

## அகதிகளுக்கு உதவி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி தென் இந்தியத் திருச்சபை கிளிநொச்சியிலுள்ள சாலோம்நகர், முறிப்பு, செல்வாநகர் ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் ஐம்பதுக்கும் மேற்பட்ட திருமலை அகதிக் குடும்பங்களுக்கு 15 நாட்களுக்குரிய உணவுப் பொருட்களை வழங்கியது. இதுதவிர ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு போத்தல் பசுப் பாலையும் இலவசமாக வழங்கி வருகிறது.

முரசுமோட்டை, விசுவமடு உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களில் தங்கியிருக்கும் திருமலை அகதிகளுக்கும் சுமார் ஐந்து லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த உணவுப் பொருட்களையும், மருந்து வகைகளையும், பால்மா வகைகளையும் வழங்கியது. (49)

## பாதுகாப்புக்காக மரங்கள் நாட்டப்படுகின்றன

(ஈச்சமோட்டை)

மக்களின் தற்பாதுகாப்பு நடவடிக்கையாக ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்திலும் அந்தோனியார் கோவில் மைதானத்திலும் அவ்வப்பகுதி இளைஞர்களால் மரங்கள் நடப்பட்டுள்ளன.

தற்பொழுது தென்னை மரத்துக்கு தட்டுப்பாடு நிலவுவதால் கூரிய மூங்கில் தடியே பயன்படுத்தப்படுகின்றன. (43)

## முறைப்பாடு

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணத்திலிருந்தும் மற்றும் வெளிமாவட்டங்களிலிருந்தும் இடம்பெயர்ந்த அகதிகளுக்கான இரண்டாம் கட்டஉலர் உணவுப் பொருட்கள் இன்னமும் வழங்கப்படாமல் இருப்பதால், தினமும் அகதிமக்கள் கிராமசேவையாளர்களிடம் முறைப்பாடு செய்து வருவதைக் காணக்கூடியதாகவுள்ளது.

## நிவாரணம் சேகரிப்பு

(கொழும்புத்துறை)

இடம் பெயர்ந்துள்ள அகதி மக்களுக்கு உதவும் வகையில் தென்மட்டுவில் இந்து இளைஞர் மன்றத்தினர் உடைகள், உணவுப் பொருட்கள் போன்றவற்றை இப்பகுதிப் பொது மக்களிடமிருந்து சேகரித்து வருகின்றார்கள். (24)

## கசிப்பு வேட்டை

(வடமராட்சி)

உடுப்பிட்டிப் பகுதியில் கசிப்பு உற்பத்தியாளர்கள் பலர் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினரால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து கசிப்புக் காய்ச்சும் உபகரணங்கள் கசிப்புக் காய்ச்சும் பொருட்கள் என்பனவும் கைப்பற்றப்பட்டன. (18)

## நிவாரணப் பணியில் பல்கலைக்கழகம்

(கொழும்புத்துறை)

இடம்பெயர்ந்த அகதிகளின் நலன்புரிச் சேவை, உதவிப் பொருட்களைச் சேகரிக்கும் பணிகள் யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்பாகச் செயற்பட்டு வருகின்றனர்.

பாதிப்பற்ற இடங்களில் இருந்து மாணவர்களால் உடுபுடைவைகள் சேகரிக்கப்பட்டு பாதிக்கப்பட்ட பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

வடமராட்சி கிழக்கு தாழையடி அகதிகளுக்கான நிவாரணப் பணிவேலைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பணியைத் திறம்படச் செயல்படுத்த ஒவ்வொரு பல்கலைக்கழக மாணவர்களிடமும் குறைந்தது ஐம்பது ரூபா பணம் வசூலிக்கப்பட்டு வருகிறது. (24)

## சீனி விற்பனை

(யாழ்ப்பாணம்)

கப்பல் மூலம், லொறிகள் மூலம் உணவுப் பொருட்கள் வருகின்ற செய்திகளையடுத்து பதுக்கி வைக்கப்பட்ட சீனி வெளியே வந்துள்ளது.

சிலர் நூறு கிராம் சீனி என்ற கணக்கில்கட்டுப்பாட்டு விலையில் விற்று வருகின்றனர்.

## உணவு அட்டைக்கு சத்தியக்கடதாசி

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவு சங்கத்தில் புதிய உணவு அட்டை எடுப்பதற்கு சமாதான நீதிவானின் சத்திய கடதாசி தேவை என இங்குள்ள கிராம சேவையாளர் அறிவித்துள்ளார்.

இதனால் சமாதான நீதிவானை தேடி மக்கள் அலைய வேண்டியுள்ளது.

## முதலுதவிப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

முறைசாராக் கல்விப் பகுதியினரால் நடாத்தப் பெற்று வரும் முதல் உதவிப்பயிற்சி வகுப்பு இம்மாதம் 26ஆம் திகதிமுதல் 30ஆம் திகதிவரை மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெறுகின்றது.

பயிற்சிபெற விரும்புபவர்கள் காலை 9 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை நடைபெறும் இவ் வகுப்புகளில் தொடர்ந்துபங்கு பற்றலாம். பயிற்சி முடிவில் கல்வித்திணைக்களத்தினரால் சான்றிதழ் வழங்கப்படும். (ம)

## சிரமத்தின் மத்தியில் நிவாரணம்

(கொழும்புத்துறை)

பாதிப்புற்ற மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கும் நோக்குடன் மன்னார் பகுதியில் இருந்து வள்ளத்தில்தள்ளாடி இராணுவ முகாமைத் தாண்டிச் சென்று முளங்காவில், பூனகரி, சாவகச்சேரி சந்தைகளில் மரக்கறி வகைகளை மன்னார்ப் பகுதி மக்கள் வாங்கிச் செல்லுகின்றனர். (24)

## கொடுப்பனவு

(பருத்நித்துறை)

பருத்தித்துறை இலங்கை வங்கியில் வாடிக்கையாளர்களுக்கு காசுக் கொடுப்பனவாக 1000 ரூபா மட்டுமே வழங்கப்பட்டு வருகின்றது. இதற்கு முன்னர் 2,000 ரூபா வழங்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது. (15)

## சங்காபிஷேகம்

(பருத்தித்துறை)

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய மண்டலாபிஷேக பூர்த்தியும் சங்காபிஷேகமும் இன்று 27 ஆம் திகதி நடைபெறுகின்றது.

இந்த ஆலயத்திற்குச் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அழகிய இராஜகோபுரத்தின் மகாகும்பாபிஷேகம் 13-06-90 இல் நடைபெற்றதையடுத்து 43 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றுவந்தது. (25)

## நிர்வாகச் செயலாளர் வேண்டுகோள்

(கொழும்புத்துறை)

நாளுக்குநாள்காயமடைந்து வரும் நம் மக்களைக் காப்பாற்றவும், வீடிழந்து அகதிகளாக வெளிமாவட்டங்களில் இருந்து வந்து தஞ்சமடைவோருக்கு உடனடி நிவாரணம் பெற்றுக் கொடுப்பதிலும் யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்துச் சன சமூக நிலையங்களும் முன்வந்து செயல் படவேண்டுமென யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சம்மேளனத்தின் நிர்வாகச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

## சங்காபிஷேகம்

(கொழும்புத்துறை)

உரும்பராய் அருள் மிகு பர்வதவர்த்தினி அம்மன் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்திவிழாவும், 1008சங்காபிஷேகமும் விசேட பூசைகளும் சுற்றுப் பிரகாரமூர்த்திகளுக்கு இன்று வெள்ளிக்கிழமை காலை எட்டு மணியளவில் ஆரம்பமாகின்றன. (24)

## இடம்மாற்றம்

(கொழுர்புத்துறை)

காங்கேசன்துறையில் இயங்கி வந்த இலங்கை மின்சார சபை அலுவலகம் தற்போது பாதுகாப்புக் கருதி துர்க்காபுரத்திற்குஇடம்மாற்றம்செய்யப்பட்டுள்ளது. (24)


''வீட்டுக்கொரு தோட்டம் வைத்து
உணவு, உற்பத்தியை ஊக்குவிப்போம்''

நல்லூர் கந்தசுவாமி திருவிழா
மில்க்வைற் விற்பனை நிலையம்

ரூபா 25/-க்குச் சோப் வாங்கி
அழகிய பொலித்தீன் பாக்,
கீரை, வெண்டி, பால் பீர்க்கு விதை
மற்றும் கரிசலாங்கண்ணி, அகத்திக்கன்று
அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்
525/2, காங்கேசன்துறை வீதி,
த. பெ. இல. 77
யாழ்ப்பாணம். (B/1288)

வெளிநாடுகளிலும், கொழும்பிலும் உள்ள உங்கள்
உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும்

அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக
கடிதங்கள், புத்தகங்கள், பார்சல்கள்
தஸ்தாவேஜுக்கள்
ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

D. H. L. International Ltd;
C/o. Cosmos Marketing Services
337, Kasthuryar Road, JAFFNA.
(B.965)

இடம்மாற்றம்

"சிற்றி ரெக்ஸ்"
'CITY TEX'
40, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

என்னும் முகவரியில் இயங்கிய எமது ஸ்தாபனம்
தற்போது கீழ்வரும் முகவரியில் இயங்குகிறது:

சிற்றி ரெக்ஸ்
CITY TEX

(நல்லூர் கோபுர வாசல் முன்பாக)
634, பருத்தித்துறை வீதி,
நல்லூர். (B/1289)

## சிந்தனைக்கு

பின்னால் நேரக்கூடிய நிகழ்வுகளை எதிர்நோக்கி நிற்பவர், விவேகமுள்ள அரசியல்வாதி, நடந்துவிட்ட நிகழ்வுகளினால் நடத்திச் செல்லப்படுபவர் விவேகமற்றவர்.

- நிக்கலாய் லெனின்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 27-07-90
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05

# சண்டையும் சமாதானமும் எதிரும் புதிருமானவை

சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கும்போதே சமாதானப் பேச்சுக்களும் நடைபெறலாமென்று சில தினங்களுக்கு முன்னர் சிறிலங்கா பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியிருந்தார்.

இதையே சிறிலங்காஜனாதிபதிரணசிங்கபிரேமதாசாவும் இப்பொழுது கூறியிருக்கிறார்.

''சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒட்டாது'' என்பது முதுமொழி. சண்டை நடந்துகொண்டிருக்கும்போது சமாதானப் பேச்சு நடத்துவதென்பதும் இதுபோலத்தான்.

நாற்பத்தெட்டு மணி நேரத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டின்மீது பெரும் தாக்குதல் நடத்தத் திட்டமிட்டு இருப்பதாகவும் சிறிலங்கா விமானப்படை விமானங்களும் ஹெலிகொப்டர்களும் தயார் நிலையிலிருப்பதாகவும் சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருக்கிறது.

பத்துத் தினங்களுக்குள் யுத்தத்துக்கு முடிவு காணப்படுமென்று ஒரு வாரத்துக்கு முன்னர் சிறிலங்கா இராணுவத்தின் வடபகுதித் தளபதி மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ கூறியிருந்தார்.

ஆனையிறவில் ஹெலிகளில் இராணுவத்தினர் பெருமளவில் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். இவர்கள் பரந்தன் சந்திவரை மூன்று தினங்களாக முயன்று முன்னேறியுள்ளனர். இதற்குள் அவர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்களோ அதிகம்.

விடுதலைப்புலிகளைக் கொன்றுவிட்டோம் என்று அரசு அறிவித்துக்கொண்டு அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று குவிக்கிறது.

கைதான இளைஞர்களைப் பற்றிய தகவலே இல்லை. பெண்கள் மானபங்கம் செய்யப்படுகின்றனர்.

தமிழ் மக்கள் பெரும்பாலும் இன்று இடம்பெயர்ந்து அகதிகளாக உணவு உடையின்றி அல்லற்படுகின்றனர்.

உயிரைப் பாதுகாப்பதற்காகத் தமிழ் நாட்டுக்குத் தப்பிச்செல்லும் தமிழ்மக்கள் சிறிலங்கா கடற்படையினால் கடல்நடுவே வைத்துக் கொல்லப்படுகிறார்கள்.

இவ்வாறு இனப்படுகொலையை சிறிலங்கா அரசு தீவிரப்படுத்திக்கொண்டு சமாதானப் பேச்சுக்குத் தயார் என்று கூறுவதன் அர்த்தம் என்ன?

உலக நாடுகளையும் அருகேயுள்ள இந்தியாவையும் ஏமாற்றி தமிழினத்தைப் பூண்டோடு அழிக்கும் தந்திரோபாயம்தான் சண்டை நடக்கும்போதே சமாதானப் பேச்சு என்பது!

# சோவியத் - இந்திய ஒப்பந்தம்
# ஐந்து வருடங்களுக்கு நீடிப்பு

(மாஸ்கோ)
இந்திய - சோவியத் யூனியனுக்கு இடையிலான இருபது வருடகால ஒப்பந்தம் மேலும் ஐந்துவருடங்களுக்குப் புதுப்பிக்கப்படவுள்ளது.

கடந்த சில நாட்களாக சோவியத் யூனியனுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் வி. பி. சிங் இன்று இந்தியா திரும்புகிறார்.

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவைச் சந்தித்த போதே இம்முடிவு எடுக்கப்பட்டதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

அடுத்த வருடம் காலாவதியாகும் இந்த ஒப்பந்தம் கொர்பசேவின் இந்திய விஜயத்தின் போது மீளவும் ஐந்து வருடங்களுக்கு நீடிக்கப் போவதாகவும் கூறப்பட்டது.

# கம்போடிய பிரச்சினை தீர்வுக்கு பாதுகாப்புச் சபை உதவி தேவை

(ஜகார்த்தா)
கம்போடியாவின் வருங்கால அரசியல் அமைப்பை விவாதிக்கும் வகையில் தேசிய சபை ஒன்று அமைக்கப்பட வேண்டும் என்று தென்கிழக்காசிய சங்க நாடுகளின் ஆசியான், வெளியுறவு அமைச்சர்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சங்கத்தின் வெளியுறவு அமைச்சர்கள் மட்டத்திலான மாநாடு நேற்று முன்தினம் இந்தோனேஷியாவின் தலைநகரான ஜகர்த்தாவில் நடைபெற்றது இந்த மாநாட்டு கூட்டத் தொடரின் போதே இந்தக் கூட்டறிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன்; கம்போடியாவில் தொடரும் யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கம்போடிய பிரச்சினையை தீர்ப்பதில் ஐ. நா. பந்தோபஸ்து சபையும், வீட்டோ அதிகாரமுள்ள ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளும் பெரிய அளவிலான பங்களிப்பினைச் செலுத்த வேண்டும் எனவும் அந்தக் கூட்டறிக்கையில் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி வெளியுறவு அமைச்சர்கள் மாநாட்டைத் துவக்கி வைத்த இந்தோனேஷிய அதிபர் சுகார்ட்டோ சமாதான நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் நாடுகள் கம்போடியா பிரச்சினையில் தமது கொள்கையை மாற்றினால் பிரச்சினையைத் தீர்ப்பதில் சிக்கல் நிலைமை ஏற்படலாம் என்று எச்சரிக்கை செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்கா மீது ஆசியான் கண்டனம்

(ஜகார்த்தா)
கம்போடியா பிரச்சினை தொடர்பான அமெரிக்காவின் கொள்கை மாற்றம் குறித்து ஆசியான் கூட்டமைப்பு தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் ஜகார்த்தாவில் முடிவடைந்த ஆசியான் வெளியுறவு அமைச்சர்களின் மாநாட்டின் முடிவில் வெளியிட்ட கூட்டறிக்கையில் இக்கண்டனம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கம்போடியா ஆட்சிக்கு எதிரான முக்கட்சிக் கூட்டணியை ஆதரிப்பதில்லை என்ற அமெரிக்காவின் முடிவு மேலும் இப்பிரச்சினை அதிகரிக்க ஒரு காரணமாக அமையும் எனவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹொங்கொங்
### மீண்டும் சீனாவிடம்

(லண்டன்)
ஹொங்கொங்கை அடுத்த ஏழு வருடங்களுக்கு திரும்பவும் சீனாவிடம் கையளிக்கப் போவதாக பிரித்தானியா அறிவித்திருக்கிறது.

நேற்று முன்தினம் ஹொங்கொங் விவகாரங்களுக்கான பிரித்தானிய அமைச்சர் தாசிட் மோரின் இதனை அறிவித்தார்.

அண்மையில் சீனப் பிரதமர் லீகுவானை சந்தித்த மோரின் ஹொங்கொங் தொடர்பாக பேசியதாகவும் குறிப்பிட்டார்.

# தற்போதைய யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானதே - தேவர்

(அச்சுவேலி)
'' தற்பொழுது இலங்கை அரசாங்கம் பிரகடனப்படுத்தி மேற்கொண்டு வரும் யுத்தம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரானது அல்ல. தமிழீழ மக்களுக்கு எதிரானது. இதனை உணர்ந்து தமிழ் இனம் தமிழ்ஈழ விடுதலைப் புலிகளின் பலத்தையும் அதிகரிக்க தம்மால் இயன்ற மட்டும் உதவி செய்ய வேண்டும்''

இவ்வாறு கூறினார் தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி பிரமுகர் திரு. எஸ். தேவர் அண்ணா அவர்கள்.

அச்சுவேலி தெற்கு பகுதி சிற்றூரவை பிரதேச மக்களிடம் தமிழ்ஈழ மீட்புநிதி சேகரிப்பு கூட்டம் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையில் திரு. சி. சிவம் தலைமையில் நடைபெற்றது.

தமிழ்ஈழ மீட்பு நிதி சேகரிப்பு கூட்டத்தில் கலந்து கொண்டு திரு. தேவர் அண்ணா தொடர்ந்து உரையாற்றும் போது-

இலங்கை அரசியலில் தமிழ் இனத்தை அடக்கி ஒடுக்கி அழிப்பதற்கான முயற்சிகள் 1924 ஆம் ஆண்டுக்குப் பிந்திய காலப்பகுதியில் கட்டம் கட்டமாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இந்த முயற்சியில் சிங்கள அரசியல் தலைவர்கள் திட்டமிட்டு செயற்பட்டு வந்துள்ளனர்.

கடந்த காலத்தில் விடப்பட்ட அரசியல் தவறு தமிழர்களின் அரசியல் வரலாற்றில் இனிமேல் நிகழமாட்டாது. இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுதியாக உள்ளனர்.

கடந்த ஒரு வருடமாக அரசாங்கத்திற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தை மூலம் புலிகளை ஏமாற்ற முடியாது என்பதை அரசாங்கம் புரிந்துகொண்டுதான் இன்றைய யுத்தத்தைப் பிரகடனப்படுத்தி தமிழ்இனத்தை அழித்தொழித்து வருகின்றது.

இது தமிழீழ மீட்சிக்கான இறுதிப்போர். இதில் எந்த விதமான கருத்து முரண்பாடும் தமிழ்மக்கள் மத்தியில் இல்லை.

எமது இனம் சுதந்திரமான காற்றைச் சுவாசித்து தனது பிரதேசத்தைச் சுதந்திரமாக ஆட்சிசெய்வதற்கு கருத்து வேறுபாடுகளை முற்றாக மறந்து தமிழ்இனம் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் பலத்தை அதிகரிக்க தம்மால் இயன்ற மட்டும் உதவிட வேண்டும் எனக் கூறினார்.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி சமினா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்.

## கலந்துரையாடல்

(கொழும்புத்துறை)
வெளிமாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் நிவாரணப் பணிகள் சம்பந்தமாகக் கலந்துரையாடுவதற்காக உலகத்தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக் கிளையின் சகல அங்கத்தவர்களையும் நாளை 28ஆம் திகதி சனிக்கிழமை காலை பத்து மணிக்கு இல. 67, யாழ். புகையிரத நிலைய வீதியிலுள்ள தலைமைச் செயலகத்தில் கூடுமாறு மேற்படி இயக்க இணைச் செயலாளர் அறியத் தருகிறார். (24)

## 'தென்றல்' குழுவினர் உணவு வழங்கினர்

(யாழ்ப்பாணம்)
வலிகாமம் பகுதியில் உள்ள நான்கு அகதிகள் முகாம்களைச் சேர்ந்த சுமார் 100 குடும்பங்களுக்கு ''தென்றல்'' குழுவினர் உணவுப் பொருட்கள், உடைகள் வழங்கியுள்ளதாக ''தென்றல்'' தலைவர் செல்வன் கா. யோ. கிரிதரன் தெரிவித்தார்.

திருக்கோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் இருந்தும், யாழ் மாவட்டத்தில் உள்ள இராணுவ முகாம்களை அண்டி உள்ள பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்து மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை அகதிகள்முகாம், ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை அகதிகள் முகாம், நவாலி மகா வித்தியாலய வெளிமாவட்ட இடம்பெயர்ந்தோர் அகதிகள் முகாம், அட்டகிரி சைவ வித்தியாசாலை அகதிகள் முகாம் ஆகியவற்றில் தங்கியிருக்கும் சுமார் 100 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 500 பேருக்கு ஒரு வாரத்துக்கு தேவையான அரிசி, தேங்காய், மரக்கறி வகைகளையும்உடைகளையும் வழங்கி உள்ளதாக அவர் தெரிவித்தார்.

யாழ். ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியின் சமூக சேவைப் பிரிவான 'தென்றல்' குழுவினர் தொடர்ந்தும் உணவுப் பொருட்கள், உடைகள் சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

# இனிப்புப் பொருள்களுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது

(அச்சுவேலி)
அச்சுவேலிப் பகுதியில் சீனி உட்பட இனிப்பு பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

சீனி, சர்க்கரை முதலிய இனிப்பு பொருட்கள் இரண்டு மூன்று மடங்கு அதிகரித்த விலையில் மிக இரகசியமாக விற்பனை செய்யப்படுகின்றது.

பனங்கட்டி கூட ஒருகிலோ 150 ரூபாவுக்கு குறையாத விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

## இடம் மாற்றம்

(கொழும்புத்துறை)
யாழ். மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகம் ஸ்ரான்லி வீதியிலிருந்து நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமைக்காரியாலய கட்டடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

சமாசத்தின் அங்கத்துவ சங்கங்கள் மேற்படி இடத்தில் தொடர்புகொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. (24)

(அச்சுவேலி)
வசாவிளான் உப தபால் அலுவலகம் அச்சுவேலியில் செயற்படுகின்றது.

வசாவிளான் தபால் அலுவலகம் யுத்த நிலைமையினால் செயற்படமுடியாமல் இருந்து வந்தது.

தற்பொழுது அந்தப் பகுதி மக்கள் பெருமளவில் அச்சுவேலி, புத்தூர், சிறுப்பிட்டிப் பகுதிக்கு இடம் பெயர்ந்து இருப்பதால் மக்களின் வசதியை முன்னிட்டு அச்சுவேலியில் செயற்படுகின்றது.

## கைமாறிய சைக்கிள்

ASIA BIKE -NO:8AB2128 இலக்கமுடைய ஏசியா பெண்கள் துவிச்சக்கர வண்டி நோயாளர் நலன் புரிச் சங்க துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்திலிருந்து 16. 06.90 அன்று நடைபெற்ற குழப்பத்தின் போது கைமாறி எடுத்துச் செல்லப் பட்டுள்ளது. இதனைதவறுதலாகமாறி எடுத்துச் சென்றவர்தயவு செய்து மானிப்பாய் வைத்திய சாலையில் இயங்கும் மேற்படி சங்கத்தின் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்.

# அகதிகளுக்கு 'உதவி'யவர்கள் அகப்பட்டதைச்சுருட்டிஅகப்பட்டனர்

(இராமேஸ்வரம்)

இலங்கைத் தமிழ் அகதிகளின் நகைகளை நடுக்கடலில் வைத்துக் கொள்ளையடித்த மீனவர்கள் மூவர் இராமேஸ்வரத்தில் தமிழக பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டதுடன் பதுக்கி வைக்கப்பட்டிருந்த திருடப்பட்ட நகைகளும் மீட்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம்பற்றித் தெரியவருவதாவது; மன்னாரிலிருந்து சென்ற அகதிகளின் படகு ஒன்று இந்திய எல்லைக்குள் சென்றுகொண்டிருந்த வேளை காற்றினால் தத்தளிக்கலாயிற்று. அப்பொழுது அங்கு தொழிலில் ஈடுபட்டிருந்த இந்திய மீனவர்கள் அந்தப்படகில் உள்ளவர்களை தமது படகில் ஏற்றிக்கொண்டதுடன் அவர்களை இராமேஸ்வரம் கொண்டு செல்வதெனில் கூலியும் கேட்கப்பட்டதாம்; இதனைத் தொடர்ந்து படகில் பயணம் செய்த அன்னம்மா என்னும் அகதிப்பெண் தனது காதிலிருந்த நகையை கழற்றிக் கொடுத்துள்ளார்.

இதன்பின் மேற்படி படகு தனது பயணத்தை தொடர்ந்த பொழுது அதில் பயணம் செய்த அகதிகள் களைப்பினால் நித்திரை அடைந்துவிட்டனராம். அப்பொழுதே உதவிக்கு வந்த இந்த மூன்று மீனவர்களும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அகதிகளின் பெட்டிகளைத் திறந்து அதிலிருந்த நகைகளையும் புடைவைகளையும் கொள்ளையிட்டுள்ளனர்.

லட்சுமணன், மகிழ்ராஜ், இராஜேந்திரன் ஆகிய மூவருமே இராமேஸ்வரம் பொலிசாரால் கைது செய்யப்பட்டவர்களாவர்.

## மீண்டும் திருமலையில்

(திருக்கோணமலை)

திருக்கோணமலை நகரில் நூற்றிஐம்பது ஈ. பி. ஆர். எல். எவ் உறுப்பினர்கள் ஆயுதபாணிகளாக வந்திறங்கி உள்ளதாக நம்பத்தகுந்த வட்டாரத்தில் இருந்து தெரியவந்துள்ளது. (58)

**வாசக அன்பர் . . .**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

காரணம் என்பதை விளக்கமாக சொல்ல வேண்டியதில்லை. இது தற்காலிக ஏற்பாடு தான். பத்திரிகைத்தாள் கிடைத்ததும் பழைய பொலிவு பெறும். இன்று ''ஈழநாதம்'' உருவம் சிறுத்திருந்தாலும் அதன் வழமையான 'காரம்' குறையவில்லை என்பதை நீங்களே உணர்ந்து கொள்வீர்கள்.

'ஈழநாதம்' பிரதியின் விலை ரூபா 3-00 மட்டுமே.

— நிர்வாகி.

**அகதிகள் புனர்வாழ்விற்கான**

## ஐக்கியநாடுகள் ஆணைக்குழு போர் முடிந்தாலே உதவுமாம்

அகதிகள் புனர்வாழ்வுக்கான ஐக்கியநாடுகள் ஆணைக்குழு போர் முடிவடைந்த பின்னர்தான் அகதிகளுக்கு உதவுமாம். யாழ்ப்பாணத்தில் நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள மேற்படி ஸ்தாபனத்தில் பணியாற்றிய அலுவலர்கள்அனைவரும் சில மாதங்களுக்கு முன்னரே இங்கிருந்து வெளியேறி விட்டனர்.

தற்போது அந்த அலுவலகத்தைபராமரிக்கும் ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே அங்கிருக்கிறார். அவரும் தமது அலுவலகத்தில் இருக்கும் வானொலி இயந்திரத்தைப் பயன்படுத்தி ஸ்ரீலங்கா அரசுக்கும் இங்குள்ள திணைக்களத்தலைவர்களுக்குமிடையே அவசர தகவல்களை பரிமாறுவதில் ஈடுபட்டுள்ளார்.

அகதிகளுக்குப் புனர்வாழ்வு அளிப்பதில் உங்கள் அலுவலகம் வகித்துவரும் பங்கு என்னவென்று நமது நிருபர் வினவியபோது போர் முடிந்த பின்னர்தான் நாம் செயற்படுவோம் என்றாராம். (75)

**உணவுடன்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரத்தியேககொள்கலன்களில் மா,சீனி போன்றவைகொண்டு வரப்படுவதாகவும் அறியவருகிறது. முல்லைத்தீவு மாவட்டத்திற்கும், யாழ்.மாவட்டத்திற்கும் உணவுப் பொருட்கள் கொண்டுவருவதால் கப்பலில் இடநெருக்கடி இருப்பதாகவும் இதனாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறியவருகிறது.

அதேவேளை நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் இரண்டு உணவுக் கப்பல்கள் வடக்கிற்கு அனுப்பப்பட்டிருப்பதாக அமைச்சர் ரஞ்சன் விஜேயரட்னா தெரிவித்துள்ளார். (லோ)

**அகதிகள் . . .**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலைக்குத் தட்டிக் கொண்டு போவதைத் தடுக்குமுகமாக இந்த நகைகளை வங்கிகளில் ஆயிரத்து இருநூறு ரூபாய் முதல் ஐயாயிரம் ரூபாய் வரை அடகு வைப்பதற்கு தமிழக அரசு ஏற்பாடு செய்துள்ளது. இதற்கென மண்டப முகாமிலேயே வங்கிக் கிளையொன்று நகைகளை அடகு வைப்பதற்கெனத் திறக்கப்பட்டுள்ளது.

## வவுனியா செயலகஊழியருக்கு; யாழ். செயலகத்தில் முற்பணம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா செயலக ஊழியர்களுக்கு யாழ். செயலகத்தினால் சம்பளமுற்பணம் வழங்கப்படும்.

வவுனியா செயலகத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்காக யாழ். மாவட்டத்தில் இருந்து வவுனியா அரசாங்க அதிபரும், பல செயலக ஊழியர்களும் வவுனியாவிற்குச் சென்றிருந்தனர்.

அங்குள்ள பாதுகாப்புஅற்ற நிலை காரணமாக இவர்கள் மீண்டும் யாழ் மாவட்டத்திற்கே திரும்பிவிட்டனர். இதனால் இவர்களுக்கான சம்பள முற்பணத்தை யாழ். செயலகத்தில் வழங்குவதற்கு யாழ். அரசாங்க அதிபர் நடவடிக்கை மேற் கொண்டு வருகிறார். (ம)

## கரை ஒதுங்கிய இயந்திரப்படகு உரியவர்களால் மீட்கப்பட்டது

(விசேட நிருபர்)

இம்மாதம் 5ஆம் திகதி பூநகரி – கல்முனைக் கரையில் ஒதுங்கிய இயந்திரப் படகு பேசாலையைச் சேர்ந்தவர்களால் மீட்டுச்செல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குருநகரில் இருந்து கல்முனையில் அகதிகளாய் தஞ்சமடைந்திருக்கும் மீனவர்கள் படகைக் கரைசேர்த்து கடற்றொழில் அபிவிருத்திச் சங்கத்திடம் ஒப்படைத்திருந்தது அறிந்ததே.

அகதிகளை தமிழகத்துக்கு ஏற்றிச்செல்லும் சேவையில் ஈடுபட்டிருந்த மேற்படி படகு மூன்று மாலுமிகளுடன் திரும்பி வருகையில் சிறிலங்கா கடற்படை ஒரு மாலுமியை தமது பீரங்கிப்படகில் ஏற்றிக் கொண்டு இரு மாலுமிகளை படகில் விட்டுக் கட்டிஇழுத்து வருகையில் இருமாலுமிகளும் படகின் கட்டை அறுத்து விட்டு தாமும் கடலில் குதித்துத் தப்பிச்சென்றுள்ளதாக இயந்திரப்படகை மீட்கவந்த படகின் உரிமையாளர்கள் சங்கச் செயலாளர் திரு. சி. தவரெட்ணத்திடம் தெரிவித்தனர்.

சிறிலங்கா கடற்படை ஏற்றிச்சென்ற மாலுமியும் உயிருடன் கடற்படை முகாமில் இருப்பதாக படகின் உரிமையாளர் தெரிவித்ததாக அறியவருகிறது. (21)

**மாத்தறையில்**

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டினுள் வைத்துச் சுட்டுக் கொன்றதாகச் செய்திகள் குறிப்பிடுகின்றன. கொல்லப்பட்டவர்கள் அரசாங்கத்திற்கு ஜே. வி. பியைக் காட்டிக் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரிலேயே கொல்லப்பட்டதாகத் தெரிகின்றது. வடக்கு - கிழக்குப் பகுதியில் சிறி லங்கா இராணுவம் விடுதலைப் புலிகளுடன் போரிடுவதைத்தமக்குச் சாதகமாக்கி ஜே. வி. பி. முன் வந்துள்ளதாகஅரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள்.

**கப்பலில் கடிதம்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கப்பலில் அனுப்பப்பட்டுள்ள பொருட்களின் பட்டியல் செஞ்சிலுவைச் சங்கத்துக்கு ஏற்கெனவே அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி கடிதப்பொதிகள் மேற்படி பட்டியலில் இருக்கவில்லையாம். தபால் பொதிகள் அனுப்பப்படாததற்கான காரணம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (75)

**உதவப்போய்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வந்துகொண்டிருந்த கதிர்காமநாதன் என்ற நுணாவிலைச் சேர்ந்தவர் நாவற்குழி கண்டி வீதியில் நடந்து வந்து கொண்டிருந்த ஒருவரை தாமாகமுன் வந்து சைக்கிளில் ஏற்றி வந்தார். கைதடியில்இருவரும் மிக சந்தோஷமாக மது அருந்தி அதற்குரிய பணத்தையும் செலுத்திவிட்டு திரும்பிவந்து பார்த்தபோது ஏற்றிவந்தவரும் மறைந்தார் சைக்கிளும் காணாமல் போய்விட்டது. இதனால் ஏக்கமடைந்தவரை வேறு பிரயாணிகள் அழைத்துச்சென்று வீட்டில்விட்டனர். (லோ)

**குடிநீர்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்நோக்கி வருகின்றனர்.

இச்சம்பவம் நடந்த சமயம் ஊரி கிராமங்கள் கடற்படையினரின் தாக்குதல்களுக்குப் பயந்து அயல் கிராமத்தில் உள்ள ஓர் கிணற்றில் நீர் பெற்றுவந்தனர் அங்கிருந்தும் இவர்கள் சாதி வேறுபாடு காட்டப்பட்டு விரட்டப்பட்டும் உள்ளனர். (லோ)

**யாழ். மாவட்டத்தில்**

## 62, 886 குடும்பங்களிலுள்ள 3, 14, 430 அகதிகள்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா அரசின் முப்படைகளும் பொதுமக்கள் வாழும் பகுதிகளில் தொடர்ந்து நடத்திவரும் தாக்குதல்களினால் யாழ். மாவட்டத்தில் 62,886 குடும்பங்களைச்சேர்ந்தசுமார் 3, 14, 430 பேர் அகதிகளாகவுள்ளனர்.

இதில் வெளி மாவட்டங்களிலிருந்துயாழ்.மாவட்டத்திற்கு இடம் பெயர்ந்து வந்த குடும்பங்கள் 9, 332 ஆகும்.

இவற்றில் திருக்கோணமலையிலிருந்து 5, 702 குடும்பங்கள், மட்டக்களப்பில் இருந்து 582 குடும்பங்கள், வவுனியாவில் இருந்து 1, 753 குடும்பங்கள், முல்லைத்தீவில் இருந்து 347 குடும்பங்கள், மன்னாரில் இருந்து 556 குடும்பங்கள், கிளிநொச்சியிலிருந்து 1039குடும்பங்கள், அம்பாறையில் இருந்து 43 குடும்பங்கள், கொழும்பில் இருந்து 47குடும்பங்களும் ஏனைய வெளி மாவட்டங்களிலிருந்து 31 குடும்பங்களும் யாழ். மாவட்டத்திற்கு அகதிகளாக இடம்பெயர்ந்துள்ளனர்.

இவை தவிர யாழ். மாவட்டத்திற்குள்ளேயே இடம் பெயர்ந்த அகதிகளின் எண்ணிக்கை 53,554 குடும்பங்களாகும். (ம)

## வங்கிகள் இயங்கவில்லை

இந்திய தொலைக்காட்சியின் செய்தியை அடுத்து யாழ் நகர் வங்கிகள் நேற்றும் இன்றும் இயங்கவில்லை. இன்னும் 48மணி நேரத்தில் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இலங்கைப் படையினர் பெரும்தாக்குதல்களை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக இலங்கை அரசு அதிகாரிகள் தெரிவித்ததாக இந்திய தொலைக்காட்சியில் செய்தி ஒளிபரப்பின்போது தெரிவிக்கப்பட்டிருந்தது.

இன்றும் வங்கிகள் இயங்க மாட்டா என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (75)

## இன்று கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசாமி ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகும் இதனையொட்டி காலையில் கொடியேற்று வைபவம் நடைபெறவுள்ளதுடன்; தற்போதைய நெருக்கடி நிலைமையின் காரணமாக உற்சவங்கள் உள்வீதியிலேயே நடைபெறஉள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கப்பலில்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்பிரட் மேலும் கூறினார்.

**லொறிகளில் வந்தவை**

கடந்த காலங்களில் லொறிகளில் கொண்டுவரப்பட்ட உணவுவிபரம்பற்றி அவர் கூறுகையில் இருமுறைகளாக லொறிகளில் எமது மக்களுக்கு உணவுப்பொருட்கள் கொண்டு வரப்பட்டது. இவற்றில் 34 மெற்றிக் தொன் அரிசியும், 86 மெற்றிக் தொன் மாவும், 38 மெற்றிக் தொன் சீனியும் வந்துசேர்ந்தன என்றும் அவர் குறிப்பிட்டார்.

**பங்கீட்டு அடிப்படையில்**

கப்பலில் கொண்டு வரப்படும் உணவுப் பொருட்கள் யாவும் கூடிய விரைவில் யாழ் மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு மக்களுக்கு பங்கீட்டு முறையில் பெற்றுக் கொள்ள வசதிகள் செய்து தரப்படும். மேலும் இடம் பெயர்ந்த தமிழர்களுக்கு இந்தப் பங்கீட்டில் முன்னுரிமை வழங்கப்படும் எனவும் அவர் கூறினார்.

**மேலும் மா**

தற்போதய நிலையில் எமது மாவட்ட மக்களின் உணவுத் தேவை கருதி மேலும் ஒரு கப்பலில் மா மட்டும் கொண்டு வருவதற்கான முன்முயற்சிகளை தாம் செய்துள்ளதாகவும், தற்போதையகப்பல்வந்ததைத் தொடர்ந்து இதற்கான நடவடிக்கைகளை கூடியவிரைவில் எடுக்க உள்ளதாகவும் அவர் கூறினார்.

**ஐ. சி. ஆர். சி பாதுகாப்பு**

இன்று தமது முயற்சியால் கொண்டுவரப்படும் உணவுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பாதுகாப்பு வழங்கும் என்றும் அவர் கூறினார். (லோ)

## புலிகள் பொய் கூறுகின்றனராம்

(கொழும்பு)

அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் பொய் கூறுகின்றனர் என்று இராணுவ உயரதிகாரிகள் ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவிடம் கூறியுள்ளதாக கொழும்பு செய்திகள் தெரிவித்தன.

ஜனாதிபதி ஐந்து தமிழ் குழுக்களுக்கிடையிலான நேற்றைய சந்திப்பின்போதேஇராணுவ உயர் அதிகாரிகளால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிங்கன் வீரமரணம்

(பரந்தன்)

கடந்த 24ஆம் திகதி அரச படையினருடன் பரந்தனில் இடம்பெற்ற கடுமையான மோதலின்போது சிங்கன் என்னும் போராளி வீரமரணமடைந்தார். இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தை செலுத்தியுள்ளனர்

## மஹோற்சவம்

சரவணை தேவபுரம் ஸ்ரீ. கதிர் வேலாயுதசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று 27ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துநாட்களுக்குநடைபெறும்

**பிரேமதாசா . . .**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பிரேமதாசாவை தனியாகச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

**கிழக்கு . . .**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அதே வேளை இன்றும் திருமலை நகரம் வெறிச்சோடிக் கிடப்பதாகவும் மக்கள் நடமாட்டம் குறைந்திருப்பதாகவும் இந்திய வானொலி அறிவித்தது.

**இராணுவத்திற்கு . . .**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைச் சந்தித்தபொழுதேஇந்த உறுதிமொழி வழங்கப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தில் படையினரின் நடவடிக்கைகள் குறித்து இக்கட்சியால் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

**ஓட்டமாவடி**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

யினரை தடுத்து நிறுத்தும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகள் கடுமையான எதிர்த் தாக்குதலை மேற்கொண்டனர். நேற்று மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல் தொடர்ந்து இடம்பெற்று வருவதாக அங்கிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**மன்னார்**

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தூதுவர்கள் மத்தியில் இதனைத் தெரிவித்த அமைச்சர் ரஞ்சன் தரைமார்க்கமாக செல்வதற்கு பல தடைகள் உள்ளமையினால் கடல், ஆகாய மார்க்கமாகவே மன்னாருக்கு செல்லவேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி 31ஆம் இலக்கத்திலுள்ள '' ஈழநாதம் '' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 27 ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.